## பிரிவு – 2

## மாநில நிதி நிலைமை

**5.2.1.** உள்ளாட்சி மன்றங்களுக்கு நிதியைப் பிரித்துக் கொடுப்பதற்குள்ள வாய்ப்புகளைப் பற்றி மதிப்பிட, தமிழ்நாட்டின் நிதி நிலைமை குறித்துப் பகுப்பாய்வு செய்ய வேண்டியது அவசியமாகிறது.

**5.2.2.** 1988–89 இலிருந்து, 1994–95 வரையிலான காலத்திற்குரிய மாநில வரவு – செலவு திட்டங்களைப் பார்த்தோமானால், (இணைப்பு எண் 107 முதல் 114 வரை) மூன்றாண்டுகளில் உபரி நிதி நிலையும், நான்காண்டுகளில் பற்றாக்குறை நிதி நிலையும் இருந்திருப்பதைக் காண முடிகிறது. இருப்பினும், இக்கால கட்டம் முழுவதிலுமே வருவாய்க் கணக்கு வரவுகளைவிட வருவாய்க் கணக்கிலான செலவே அதிகமாக இருந்து வந்துள்ளது. 1988–=89 இல், ரூ.274 கோடியாக இருந்த பற்றாக்குறை, 1991–92இல் மிக உச்ச அளவாக ரூ.1904 கோடியாக அதிகாரித்து, 1994–95இல் ரூ.416 கோடியாகக் குறைந்துள்ளது. மாநில அரசு, தனது நிதி ஆதாரங்களைக் கணிசமான அளவுக்கு அதிகரிக்க ஒருங்கிணைந்த முயற்சிகள் மேற்கொண்டு வந்த போதிலும் இதற்கு மாறாக, மேற்கண்ட நிலை ஏற்பட்டுள்ளது. மூலதனக் கணக்கு, 1990–91 இலிருந்து உபரியாகவே இருந்து வந்துள்ளது. இதனுடன் இக்கால அளவுகளில் பொதுக் கணக்கில் ஏற்பட்ட உபரியும் சேர்ந்து, ஒட்டு மொத்த பற்றாக்குறையைக் குறைக்கவும் அல்லது உபரி நிலையை ஏற்படுத்தியும் உள்ளது. இதன் பயனாக, வருவாய்ப் பற்றாக்குறையினால் ஏற்படும் விளைவு தணிக்கப்பட்டுள்ளது.

### வருவாய்க் கணக்கில் வரவுகள்

**5.2.3.** வரி மற்றும் வரி அல்லாத ஏனைய வருவாய் ஆதாரங்கள், மத்திய அரசு வழங்கும் உதவி மானியங்கள் ஆகியவற்றிலிருந்து ஒரு மாநிலத்திற்கு வருவாய் கிடைக்கிறது. வரி மூலம் பெறும் வருவாயானது மாநில ஆயத்தீர்வை, விற்பனை வரி, மோட்டார் வாகன வரி போன்று பொருள்கள் மற்றும் பணிகள் மீது விதிக்கப்படும் மறைமுக வரியிலிருந்து அதிகமாகக் கிடைக்கிறது. மத்திய ஆயத்தீர்வையில் மாநில அரசுக்குக் கிடைக்கும் பங்கும் இந்த வருவாயில் அடங்கும். சொத்துக்கள் மூலம் வருமானம் மற்றும் மூலதனப் பற்றுவரவுகள் ஆகியவற்றின் மீதும் நேரடி வரிகள் விதிக்கப்படுகின்றன. இதில் வருமானவரி (Income Tax)யின் பங்குத் தொகை மற்றும் வேளாண்மை வருமானவரி, நிலவரி, முத்திரைத்தாள் தீர்வை, பத்திரப் பதிவுக் கட்டணங்கள், நகர்ப்பகுதி நிலவரி ஆகியவவை இதில் அடங்கும். ஏழாண்டு ஆய்வுக் காலத்தில், வரி வருவாயில் நேரடியான வரிகள் மூலம் கிடைத்த வருவாய் சராசரியாக 15 சதவீதம் மறைமுக வரிகள் மூலம் கிடைத்த வருவாய் 85 சதவீதம். மாநிலத்திற்கு மிக அதிக வருவாய் ஈட்டித் தரும் ஒரே வரியினம், விற்பனை வரியாகும். இவ்வரி வாயிலாக 1995–96 இல் கிடைத்த வருவாய் ரூ.3914 கோடியாகும். மாநிலத்தின் வரி அல்லாத இனங்களிலிருந்து வருவாய் ரூ.355 கோடியிலிருந்து ரூ.773 கோடியாக அதிகரித்துள்ளது. அதில் வட்டி வகையில் வருவாய் 37 சதவீதம்; பொதுவான பணிகள் வகையில் 16 சதவீதம்; சமூகப் பணிகள் வகையில் 13 சதவீதம் ஆகும். மத்திய அரசு வழங்கும் மானியங்கள் ரூ.437 கோடியிலிருந்து ரூ.878 கோடியாக அதிகரித்துள்ளது.

**வருவாய்க் கணக்கிலான செலவுகள்**

**5.2.4.** வருவாய்க் கணக்கிலான செலவு, 1988–89இல் ரூ.3763 கோடியாக இருந்து, 1994–95 இல் ரூ.9635 கோடியாக, அதாவது சுமார் 2.5 மடங்கு அதிகரித்துள்ளது. ஆண்டு சராசரி உயர்வு சுமார் 26 சதவீதம் ஆகும். மாநில அரசின் செலவுகளில் காட்டப்பட்டுள்ள உள்ளாட்சி மன்றங்களுக்கான இழப்பீடும் ஒப்படையும் என்ற தலைப்பு அனைத்து உள்ளாட்சி மன்றங்களுக்கும் அதாவது, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், பேரூராட்சிகள், நகராட்சிகள், மாநகராட்சிகள் ஆகியவற்றுக்கு அளிக்கப்பட்ட நிதி உதவியைக் குறிப்பிடுகிறது. இது, ஆய்வுக் காலத்தில் சுமார் ரூ.78 கோடியிலிருந்து ரூ.133 கோடியாக அதிகரித்துள்ளது. இவ்வுயர்வு, மாநிலத்தின் வருவாய்க் கணக்கிலான செலவுகளில் சுமார் 2 சதவீதம் ஆகும். இதனுடன், அரசு உள்ளாட்சி மன்றங்களுக்காக ஒதுக்கிய வரிகளிலிருந்து கிடைக்கும் வருவாயை அவற்றுக்கு அளிப்பதோடு, குறிப்பிட்ட நோக்கத்திற்கான வருவாய் மானியங்களையும் பொது நோக்கத்திற்கான வருவாய் செலவின மானியங்களையும் அளித்து வந்துள்ளது.

**5.2.5.** 1988–89 முதல் 1994–95 வரையிலான காலத்தில், வருவாய்க் கணக்கிலான செலவுகள், சராசரியாக நிகர மாநில மொத்த வருவாயில் 22 சதவீதம் ஆகும். வருவாய்க் கணக்கிலான தனி நபர் செலவு, 1988–89 இல் ரூ.674இலிருந்து 1994–95இல் ரூ.1725 ஆக அதிகரித்துள்ளது. தோராயமாக, ஆண்டு சராசரி உயர்வு 26 சதவீதம் ஆகிறது.

**5.2.6.** மாநிலத்தின் நிதி ஆதாரத்தில் ஏற்படும் பற்றாக்குறையை ஈடுகட்ட

(i) மத்திய அரசின் வரிகளில் மாநிலத்தின் பங்கு
(ii) மத்திய அரசு அளிக்கும் உதவி மானியங்கள்
(iii) மூலதன வரவுகள்
(iv) வழிவகை முன்பணங்கள் ஆகியவை பயன்படுத்தப்படுகின்றன.

1988–89 முதல் 1993–94 வரையிலான கால அளவில், சராசரியாக மூலதன வரவுகள் 86 சதவீதமும், மத்திய அரசின் வரிகளில் மாநில அரசின் பங்கு 9 சதவீதமும் மானியங்கள் 5 சதவீதமும் அடிப்படை நிதி ஆதாரப் பற்றாக்குறையை ஈடு செய்யப் பயன்படுத்தப் பட்டுள்ளன.

**5.2.7.** மாநிலத்தின் நிதி நிலை, நிறைவளிப்பதாக இல்லை. இந்நிலையில், மாநில நிதி ஆணையம் அதன் ஆய்வு வரம்பின்படி, 1997 முதல் 2002 வரையிலான கால அளவுக்கு நிதிப் பகிர்வுகள் குறித்துப் பரிந்துரை செய்ய வேண்டியுள்ளது. மாநில நிதி ஆணையத்தின் வேண்டுதல் பேரில் மாநில அரசின் நிதித்துறை 1997 முதல் 2002 ஆம் ஆண்டு வரையிலான காலத்திற்குரிய வருவாய் எதிர்பார்ப்பு மதிப்பீடு ஒன்றை அளித்துள்ளது. திட்ட முன் மதிப்பீடு அதன் விவரம் வருமாறு:–

அட்டவணை 5.1 வருவாய்ப் பெருக்கத் திட்ட முன் மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்)

| வரி வருவாய் | 1997–98 | 1998–99 | 1999–2000 | 2000–01 | 2001–02 |
|---|---|---|---|---|---|
| வேளாண்மை நிலங்கள் முதான வரிகள் | | | | | |
| நிலம் | 1936.88 | 2033.72 | 2135.41 | 2242.18 | 2354.29 |
| நிலவரி | 4082.61 | 4286.74 | 4501.07 | 4726.13 | 4962.44 |
| முத்திரைத்தாள் தீர்வையும் பத்திரப் பதிவும் | 63828.25 | 68934.51 | 74449.27 | 78171.73 | 82080.32 |
| வேளாண்மை நிலம் தவிர அசையாச் சொத்துக்கள் மீதான வரி | 1237.05 | 1298.90 | 1363.85 | 1432.04 | 1503.64 |
| மாநில ஆயத்தீர்வை | 81808.77 | 89989.65 | 98988.61 | 103938.04 | 109134.94 |
| விற்பனை வரி | 549866.26 | 615850.21 | 689752.23 | 724239.84 | 760451.84 |
| வாகனங்கள் மீதான வரி | 41895.06 | 43570.87 | 45313.70 | 47579.39 | 49958.36 |
| சரக்குகள் – பயணிகள் மீதான வரி | 12736.95 | 13373.80 | 14042.49 | 14744.62 | 15481.85 |
| மின்சாரம் குறித்த வரிகள் – தீர்வைகள் | 13244.69 | 13906.92 | 14602.27 | 15332.38 | 16099.00 |
| ஏனைய வரிகளும் பொருள்கள் மீதான தீர்வைகளும் | 16093.57 | 16898.25 | 17743.16 | 18630.32 | 19561.83 |
| மாநிலத்தின் மொத்த சொந்த வரி வருவாய் | 786730.09 | 870143.56 | 962892.07 | 1011036.67 | 1061588.50 |
| மொத்த வரி வருவாயும் மத்திய அரசிடமிருந்து பெற்ற வரவுகளும் | 1110608.50 | 1218899.74 | 1338515.33 | 1415682.21 | 1497591.74 |
| மொத்த வருவாய்க் கணக்கிலான செலவு | 1465355.53 | 1685158.86 | 1937932.69 | 2228622.60 | 2562915.99 |
| உபரி/ பற்றாக்குறை | - 354747.03 | -466259.13 | -599417.36 | -812940.39 | -1065324.24 |

**5.2.8.** இம் முன்மதிப்பீடு மாநிலத்தின் திருப்திகரமற்ற நிதிநிலையைப் பிரதிபலிப்பதாகவே உள்ளது. முன்மதிப்பீட்டில் குறிப்பிட்டவாறு,பற்றாக்குறை ஆண்டுக்காண்டு அதிகரித்துக் கொண்டே செல்கிறது. அதாவது, பகிர்ந்தளிக்க வேண்டிய நிதி ஆதாரங்கள் – அடுத்த ஐந்தாண்டுகளில் குறைந்து கொண்டே வரும். இந்த நிலையில், மாநில அரசின் அனுமானங்களின் தன்மையை சற்று ஆராய்ந்து ஆய்வு செய்வது பயனுள்ளதாக இருக்கும். வருவாய்ப் பெருக்க முன்மதிப்பீட்டைக் கணக்கிடுவதற்கு, அண்மைக் கால கணக்கும் 10 ஆம் நிதிக் குழு கருத்துத் தெரிவித்த வளர்ச்சி வீதங்களும் பின்பற்றப்பட்டுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

**5.2.9.** எனினும், அரசியலமைப்புச் திருத்தச் சட்டத்தின் முலம் உள்ளாட்சி மன்றங்களுக்கு, அதிகப் பணிகளும் பொறுப்புகளும் உள்ள தன்னாட்சி அமைப்பு அந்தஸ்து அளித்த பின்னர், அவற்றின் நிதி ஆதாரப் பற்றாக்குறையை ஈடு செய்ய வழி வகைகளைக் கண்டறிவது மத்திய மாநில அரசுகளின் கடமையாகும்.